# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்
# கோயம்புத்தூர்

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

# புதிய பயிர் இரகங்கள் வெளியீட்டு விழா

# மாநில அளவிலான உழவர் தினவிழா

நாள்: **11.01.2014 (சனிக்கிழமை )** இடம்: **பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா அரங்கம்**

- **மாண்புமிகு தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்** சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழாவை துவக்கிவைக்க உள்ளார்.
- தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள உழவர்கள், விரிவாக்க அலுவலர்கள் மற்றும் வேளாண் விஞ்ஞானிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.
- பல்கலைக் கழகத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள புதிய பயிர் இரகங்கள், தொழில் நுட்பங்கள் மற்றும் பண்ணைக் கருவிகள் நெல், உளுந்து, தீவனச்சோளம், ஊட்டிபட்டர்பேரி மற்றும் மரவள்ளிக் கிழங்கு தோண்டும் கருவி வெளியிடப்படும்.
- “வேளாண் உற்பத்தியை இரு மடங்காக்குதல், உழவர்களின் வருவாயை மும்மடங்காக்குதல் என்ற குறிக்கோளுடன் நிரந்தரமான மத்திய பொருட்காட்சி உருவாக்கப்பட்டு திறக்கப்பட உள்ளது. மத்திய பொருட்காட்சியில் கீழ்க்காணும் பயிர்கள் மற்றும் தொழில் நுட்பங்களில் கருத்துக்காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| • நெல் | • சிறுதானியங்கள் |
| • பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள் | • பருத்தி, கரும்பு, தீவனப் பயிர்கள் |
| • பழங்கள், காய்கறிகள் | • மலர்கள், மூலிகைப் பயிர்கள், வாசைன திரவியங்கள் |
| • பண்ணை இயந்திரங்கள், கருவிகள் | • மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு, உயிர் ஆற்றல் |
| • அறுவடை பின்சார் தொழில் நுட்பம் | • காளான் வளர்ப்பு, தேனி வளர்ப்பு, பட்டுப் புழு வளர்ப்பு |
| • வனவியல் | • ஒருங்கிணைந்த பண்ணையம் |
| • பனைப்பொருட்கள் | • வேளாண்மை ஊரக மேம்பாடு |
| • வேளாண் வணிக மேம்பாடு | • திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி |
| • மண்வளப்பாதுகாப்பு, தானியங்கி வானிலை நிலையம் | • வளங்குன்றா அங்கக வேளாண்மை |

- பல்கலைக்கழகம், அரசுத்துறைகள் மற்றும் வேளாண் சார்ந்த தனியார் நிறுவனங்கள் மூலம் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியில், வனவியல், கால்நடை பாராமரிப்பு போன்ற தொழில் நுட்பங்கள் பார்வையாளர்கள் பயன்பெறும் வகையில் கருத்துக்காட்சிகளாக அமைக்கப்படும்.

- பண்ணை இயந்திரகள், கருவிகள், நாற்றுகள், இடுபொருள்கள், விளைபொருட்கள் ஆகியவைகளும் கருத்துக் காட்சியில் இடம்பெறவுள்ளது.

- உழவர் பெருமக்கள் மற்றும் இதர பார்வையாளர்கள் நேரடியாகப் பார்த்துப் பயன்பெறும் வகையில் நெல் இனவிருத்தி மையம், புன்செய் பயிர்கள், பழத்தோட்டம், தீவனப்பயிர்கள், சிறுதானியங்கள் அபிவிருத்தி மையம், பண்ணை இயந்திரங்கள் போன்ற இடங்களில் நேரடி செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்படும்.

- "புதிய பயிர் ரகங்கள் மற்றும் பண்ணைக்கருவிகள்" மற்றும் "கணினி வழி விரிவாக்க முனைவுகள்" ஆகிய கையேடுகள் வெளியிடப்படும்.

- "உழவர்கள் சேவையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்" என்ற குறும்படம் உருவாக்கப்பட்டு குறுந்தகடாக வெளியிடப்படுகிறது.

- "வேளாண்மை சந்தைப்படுத்தும் தகவல்கள் அமைப்பு" என்ற புதிய கணனி மென்பொருள் உருவாக்கப்பட்டு பல்கலைக்கழக இணையதளத்தில் சேர்க்கப்பட உள்ளது.

- தானியங்கி விதை வழங்கும் கருவி அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

- மூன்று சிறந்த விதை உற்பத்தி மையங்கள் மற்றும் விதை உற்பத்தியில் சிறப்பாக பங்காற்றிய மூன்று விஞ்ஞானிகளுக்கும் விருதுகள் வழங்கப்படும்.

- புதிதாக வெளியிடப்பட உள்ள பயிர் இரகங்களின் விதைகள் உழவர் பெருமக்களுக்கு விநியோகிக்கப்பட உள்ளது.

- பல்கலைக்கழகத்தின் பல்வேறு பண்ணைப் பகுதிகளை பொதுமக்கள் பார்வையிடுவதற்கு ஏதுவாக இரு சக்கர மற்றும் நான்கு சக்கர மின் ஊர்திகள் தொடங்கி வைக்கப்பட உள்ளன.

- சி.ஆர்.ஐ. பம்பு நிறுவனத்தோடு இணைந்து வேளாண்மையில் சாதனைபுரிந்த ஐந்து விவசாயிகளுக்கு ' வேளாண்மைச் செம்மல்' விருதுகள் வழங்கப்படும்.

- வேளாண்மைத் தொழில் நுட்பம் சம்மந்தமான சந்தேகங்களுக்குத் தீர்வுகாணும் வகையில் உழவர்கள்-விஞ்ஞானிகள் கேள்வி-பதில் கலந்துரையாடல் நிகழச்சி மதியம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- வேளாண்மைத் தொழில் நுட்பங்களில் உழவர்களின் கருத்துக்களை கேட்டறிந்து அதன்படி விரிவாக்கப் பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக உழவர்கள் கருத்துக்கேட்பு நிகழ்வு நடைபெறும்.

**முனைவர். கு. இராமசாமி**
துணைவேந்தர்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கழைக்கழகம்